## ஜனவரி - 22

**"கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களே, நீங்களெல்லாரும் திடமனதாயிருங்கள். அவர் உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்."**

**- சங் 31:24**

பல சந்தர்ப்பங்களில் அந்த பலத்த சத்துரு நம்மை சோதிப்பது போல் இருக்கும். நம்மை ஊக்குவிப்பதற்கு பதிலாக அதைரியப்படுத்துவது போல் இருக்கும். இடுக்கமான வாசல் வழியாக போவதால் நமக்கு இடுக்கண்களும் உபத்திரவங்களும் வரும். இதனை சகித்துக்கொண்டு போவதால் நமக்கு பலன் எதுவும் கிட்டாது என நம்மை நினைக்கத் தூண்டும். எனவே நம்முடைய பிரயத்தணங்களை விட்டு விடுமாறு செய்ய முற்படுவோம். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை நமக்கு வருகையில் நாம் எத்தகைய ஒரு வழிமுறையை பின்பற்ற வேண்டும். நாம் நமது கர்த்தருடைய முன்மாதிரியை பின்பற்ற வேண்டும். நமது பிதாவின் முகத்தை நாட வேண்டும். நாம் கொண்டிருக்கும் ஆர்வம் அவரைப்பற்றியதாக இருக்கிறதா என பார்த்தல் வேண்டும். அவருக்கு உகந்ததா என பார்த்தல் வேண்டும். நமக்கு ஒர் உத்திரவாதம் கிடைத்தால் என எண்ணத் தோன்றும். உலகம் நம்மைப் பகைத்தாலும் நமக்கு விரோதமாக பொல்லாங்கு நடப்பித்தாலும் நமக்கு அவர் கொடுத்த உத்திரவாதம் உண்டு. நமக்கு மேலும் பல புதிய உத்திரவாதங்களை கொடுப்பார். நமக்கு நித்திய ஜீவனுக்குள் ஓர் பங்கு உண்டு. நீதிமான்கள் உயிர்தெழுந்து வருகையில் நாம் அதில் ஒரு பங்கு பெற்றிருப்போம்.

**- Z ’01, 79 (R 2773).**

நமதாண்டவர் பேரில் நம்பிக்கை வைப்போர் அவருடைய வார்த்தையையும் அவருடைய பராமரிப்பையும் சார்ந்தவரகளாக இருப்பார்கள். ஏனெனில் தேவன் அவர்கள் பக்கம் இருக்கிறார். அவர்கள் திடமனதாயிருப்பார்கள். எப்படிப்பட்ட துயரங்கள் அவர்களது வாழ்க்கையில் நேரிட்டாலும் கிறிஸ்துவின் சாயலைப்போல அவருடைய குணநலங்களைப்பெற எல்லாம் நன்மைக்கேதுவாக நடைப்பெறும் என தங்களின் இருதயத்தை ஸ்திரப்படுத்திக் கொள்கிறார்கள். சோர்ந்து போகும் சந்தர்ப்பங்கள் வருகையில் சோர்ந்து போகாமல் கர்த்தருக்கு காத்திருக்கிறவர்கள் திடமனதாக இருக்கட்டும். செய்கின்ற ஒவ்வொரு நற்கிரியையும், அவருடைய பார்வையில் நலமானதாகத் தான் இருக்கும். அவர் அதின்படி எல்லோரையும் ஆசீர்வதிப்பார்.

**-P ’35, 183.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

உபா 31:23; யோசு 1:5-9; 1நாளா 22:13; 2நாளா 15:7; 19:11; 32:7-8; சங் 25; 27; 31:24; எசே 2:6; 3:9; யோவா 16:33; ரோம 8:35-39; 1கொரி 16:13; எபே 1:19; 3:16; 6:10; கொலோ 1:11; 2தீமோ 1:7.

**கோபுர வாசிப்பு :** Z ’13, 309 (R 5329).

**வினாக்கள்:** இந்த வாரத்தில் நான் தைரியமூட்டப்பட்டு பலப்படுத்தப்பட்டேனா? அது எவ்வாறு நிறைவேறியது? அல்லது தடைப்பட்டது? அதன் விளைவு என்ன?